★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 22உ புதன் (7—11—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 23உ வியாழன் (8—11—56) [இதழ் 128

கல்லக்குடியைச் சுரண்ட மேலும் ஒரு வடநாட்டு முதலாளி!

வடநாட்டுப் பெரும் பணக்காரரான சாந்தி பிரசாத் ஜெயின் என்பார், ரூ 2-கோடி செலவில், புதிய சிமெண்டு தொழிற்சாலை ஒன்றை டால்மியாபுரத்தில் திறவியுள்ளார். இது டால்மியாபுரத்தில் மூன்றாவது தொழிற்சாலையாகும்.

அசோகா சிமெண்டு தொழிற்சாலை என்று பெயரிடப்பட்டுள்ள இங்கு நாள் ஒன்றுக்கு 800 டன் சிமெண்டு உற்பத்தியாகுமாம்! 500 தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்குமாம்! இதுதான் ஆசியாவிலேயே தனிப்பட்ட மிகப்பெரிய சிமெண்டு தொழிற்சாலையாம்! இதை பீகார் முதலமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்ஹா திறந்து வைத்திருக்கிறார்.

உரிமை உணர்வு பெறுவீர்! விடுதலை வேட்கை கொள்வீர்!

தாயகம் பெருமையுற விடுதலை பெற வீறுகொண்டெழுவீர்

தாய்க்குலத்திற்கு அண்ணா அன்பழைப்பு

"நாம் சார்ந்துள்ள இயக்கம், மாதர் குலத்திற்கு உண்மையான விடுதலையையும், உரிய பெருமையையும் தேடித் தரும் இயக்கமாகும்.

பெண்களின் விடுதலை எங்களுக்கு இலாபம்

"மற்ற மற்ற இயக்கங்களுக்கெல்லாம், பெண்கள் விடுதலை பெற்றுப் பெருமையுற்ருல் அதில் உள்ள ஆண்களுக்கு நஷ்டம். ஆனால், நமது இயக்கத்திற்கு, பெண்கள் விடுதலை பெற்ருல் இலாபமே தவிர, பல வழிகளிலும் நஷ்டமேதுமில்லை ஏனெனில், நமது இயக்கத்திற்கு எதிர்ப்பு கிளப்புவோர் முதலில் குடும்பத்திலிருக்கும் பெண்கள்தான்; அந்தப் பெண்கள் நல்ல பகுத்தறிவு பெற்று, வீறுகொண்டு எழுந்து, விடுதலை உணர்வு கொண்ட வீராங்கனைகளாக மாறுவரேயானுல், அது நமக்கு இலாபம் தருவதாகும்.

"பொதுவாழ்க்கையில் என்னைப் போன்றவர்கள் சலிப்படையாமல் தொடர்ந்து ஈடுபடுவதற்குக் காரணம், என் வீட்டில் உள்ளவர்கள் என் போக்கிற்கு இடையூறு செய்யாமல் என்னோடு இணைந்து நிற்கக்கூடிய பக்குவத்தைப் பெற்றிருப்பது தான்.

"எனது துணைவியார், 'என்ன, இயக்கமாம் இயக்கம்; என்ன வேண்டிக்கிடக்கிறது?' என்று, தனக்கு இதர பெண்களுக்குக் கிடைப்பதைப்போன்ற வாய்ப்புகள் தனது வாழ்க்கையில் கிடைக்காமற்போனதை எண்ணிப் பேச முற்பட்டிருந்தால், எனது பொதுவாழ்க்கைப் பயணம் இடையூறு மிகுந்ததாயிருந்திருக்கும்.

"ஆகவேதான் கூறுகிறேன்—நமது இயக்கத்திற்கு, தாய்க்குல விடுதலை இலாபகரமானது—என்று! இதர இயக்கத்தவருக்கு, பெண்கள் உரிமை பெறுவதும், விடுதலை கோருவதும் நஷ்டம் தருவன என்றே கருதப்படுகின்றது"

—என்று அண்ணா அவர்கள், சென்னையில் நடைபெற்ற மகளிர் மன்றத் துவக்க விழாவில் சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"மூவலூர் மூதாட்டியாரும், டாக்டர் தருமாம்பாள் அம்மையாரும், இதர தாய்மார்களும் சேர்ந்து இந்த மகளிர் மன்றக் கூட்டத்தில் கலந்துகொள்வது காண மகிழ்கிறேன். மூதாட்டியாரும், தருமாம்பாள் அம்மையாரும் இங்கு மகளிர் மன்றத்திற்கு வந்திருந்து தங்களின் அறிவாற்றலைத் தரச் சம்மதித்திருப்பதற்காக நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"அந்த மூதாட்டியர் இருவரும் கடந்த 45 ஆண்டுக்காலமாக தமிழ் நாட்டின் பொதுப் பணியிலும் சமூகப் பணியிலும் ஈடுபட்டுவருபவர்கள்; அவர்கள், எங்களை வழி நடத்திச் செல்ல வந்திருப்பது காண மகிழ்கிறேன்.

"தந்தைகளாயிருப்போர், எங்களை கடைசிவரை வழி நடத்திச் செல்லவில்லை; ஆனாலும், தாய் நிலையிலிருக்கும் மூதாட்டியர்கள், தங்களின அறிவாற்றலை, மகளிர் மன்றத்தின் மூலம் தர ஒப்பியிருப்பது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாகும்.

"மகளிர் மன்றக் கூட்டத்தில், இப்படி ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கூடுவர் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

"ஆனால் இங்கே வந்த பிறகு கண்ட காட்சிகளும், கேட்ட கருத்துக்களும் எனக்கு மிகுந்த நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கின்றன.

"துவக்கத்திலேயே, மன்றம் விறுவிறுப்போடு வேலை செய்வதையும், இங்கு தெரிவிக்கப்பட்ட மன்றத்திற்கான எதிர்காலத் திட்டங்களையும் நான் வரவேற்கிறேன்.

"ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் வேலை செய்தால், எதிர்காலத்தில் மன்றம் வலுப்பெற்று, நாட்டுக்கு நல்ல பணியாற்ற முடியும் என்றும் நம்புகிறேன்.

"இந்த மகளிர் மன்றத்திற்கும், இதர மன்றங்களுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் உண்டு.

"இங்கே பேசியவர்கள் பலர், இந்த மகளிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்றது அல்ல—என்பதை விளக்கமாக எடுத்துரைத்தார்கள்.

"மகளிர் மன்றம், 'லேடீஸ் கிளப்' போன்ற உல்லாசப் பொழுது போக்கு ஸ்தாபனம் அல்ல; அந்த ஸ்தாபனங்கள் மகளிருக்குப் பெற்றுத் தருவது கேளிக்கையும் களியாட்டமும்தான். நமது மன்றம் அப்படிப்பட்டது அல்ல என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

மகளிர் மன்றம் செய்ய வேண்டுவதென்ன?

"அறிவைப் பயன்படுத்துபவர்களாக — உரிமை உணர்ச்சி கொண்டவர்களாக — நாட்டை மீட்கும் விடுதலை வேட்கை கொண்டவர்களாக நமது தாய்மார்களை ஆக்குவதற்குத்தான், இந்த மகளிர் மன்றம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

"இந்த மூன்று அடிப்படையான நோக்கங்களை, தாய் நாட்டுத் தாய்மார்கள் அனைவரும் பெறுவார்களேயானுல், அது, தாயக விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன்படுவதாகும்.

"தாய்க் குலத்தவரை அந்த நிலைக்கு இழுத்து வரத்தான் மகளிர் மன்றம் பாடுபட்டாக வேண்டும்.

"அதற்கு மகளிர் மன்றத்திலிருப்போர், தங்கள் திறமையை வளப்படுத்திக்கொள்ள வேண்டும்; தன்னம்பிக்கையை இழந்துவிடக் கூடாது; மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

பேசுவதுமட்டும்பணியல்ல

"மகளிர் மன்றத் துவக்க விழாவில் பலர் பேசக் கேட்டோம்; நன்கு பேசக்கூடிய—கருத்துக்களை எடுத்துரைக்கக்கூடிய ஆற்றலுடையவர்களைக் கண்டோம்; ஆனால் 'பேசுவதுமட்டுமே பணி,' என்று கருதிவிடக்கூடாது, மகளிர் மன்றத்திலிருப்போர்!

"அவர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிகள் பலப்பல; நான் துவக்கத்தில் கூறியபடி, நமது தாயக விடுதலைக்கு, தாய்க்குலம் தனது பங்கைச் செலுத்தியாக வேண்டும். அதற்குத் தாய்க்குலத்தைத் தயாரிப்பதுதான், மகளிர் மன்றத்தின் தலையாய பணியாக இருக்க முடியும்.

"இங்கே பேசும்போது ஒரு சிலருக்குக் கஷ்டமும், வெட்கமும் இருப்பதைக் கண்டோம்; ஆனால் அவர்கள் எல்லாம், தன்னம்பிக்கையை இழந்துவிடாமல் மேலும் மேலும் முயற்சித்தால் நிச்சயம் நல்லவகையில் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் ஆற்றலைப் பெற முடியும்.

"பேசுவது முடியவே முடியாது என்ற நிலை இருக்குமானுல், அந்தத் தாய்மார்கள், பேசுபவர்களுக்குக் குறிப்புகளைத் தயாரித்துத் தருபவர்களாகவும், சொல்ல வேண்டிய விஷயங்களைத் தொகுத்துத் தருபவர்களாகவும் பணியாற்ற முடியும்.

சிந்தனைப் பொருத்தம் வேண்டும்

"பேசக்கூடிய ஆடவர்களுக்கு, பெண்கள் இந்த வகையில் பெரிதும் உதவ முடியும் ஆனால், இந்த நிலைமை இப்போது நம் குடும்பங்களில் இல்லை. அத்தகு சிந்தனைப் பொருத்தம், ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஏற்படுகிற நிலை தோன்ற வேண்டும்.

கல்வி வளர்ச்சியில் அக்கரை கொள்வீர்

"மேலும், கல்வி வளர்ச்சியில் தாய்க்குலம், பெரும் அக்கரை காட்டியாக வேண்டும்.

"இனி, வயதுவந்த பெண்களுக்கெல்லாம், மகளிர் மன்றம், ஆரம்பக் கல்விபோதனையில் ஈடுபட வேண்டும் என்று நான் கூறுவதாகக் கொள்ளக்கூடாது.

"இங்கே பேசிய பெண்கள், சங்ககாலப் பெண்களின் புலமையையும் ஆற்றலையும், வீரத்தையும் எடுத்துரைத்தார்கள்.

"இந்தச் சங்ககால நிலைமையையும், இடைக்கால நிலைமையையும், இன்றுள்ள நிலையையும் தாய்மார்களுக்கு எடுத்துக்கூறி, எதிர்காலத்தில் என்ன நிலைமை வேண்டும் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு செய்யவேண்டும், மகளிர் மன்றத்தவர்!

"இதுபோன்ற கருத்து விளக்கங்கள், எல்லாத் தாய்மாருக்கும் கிடைக்கவேண்டும். அதுவே, பெரியவர்களாகிவிட்ட தாய்மார் பெறக்கூடிய கல்வியாகும்.

"செல்லூருக்கு அருகே, கிராமம் ஒன்றில், ஆண்களோடு போட்டியிட்டு, 22 பெண்கள் ஊராட்சி மன்றத்தைக் கைப்பற்றினர்; அந்த ஊராட்சி மன்றம் முழுவதும் பெண்கள்வசம்!

"கடந்த பலகாலமாக ஆண்களால் சாதிக்கமுடியாதிருந்த காரியம் ஒன்றை அந்தப் பெண்கள் சாதித்திருக்கின்றனர்; அந்த கிராமத்திற்கு மின்சார வசதியைப் பெற்றுத் தந்திருக்கின்றனர்!

"பெண்கள், தங்கள் சொந்தக்காரியத்தைச் சாதித்துக்கொள்வதிலேயே கண்ணாயிருப்பர் என்று கூறுவார்கள்! ஆனால், செல்லூர் கிராமப் பெண்கள் பொதுக் காரியத்தைக் கவனிப்பதில் பெரும் வெற்றிபெற்றிருக்கிறார்கள்

"இந்தச் சம்பவம், தாய்மார்கள், நாட்டுக்கான நல்ல காரியங்களில் வெற்றிகரமாக ஈடுபட முடியும் என்பதைத்தான் எடுத்துரைக்கின்றது.

"இந்தப் பொதுக் காரியத்தில் ஈடுபடும் மனப்பான்மை பெண்களிடத்தில் வளர்க்கவும் மகளிர் மன்றம் பாடுபட்டாகவேண்டும்.

"சிறப்பான பணியாற்றி, தாய்த்திருநாட்டிற்குப் பெருமையும் விடுதலையும் தேடித்தர வருமாறு தாய்க்குலத்தை அன்போடு அழைக்கிறேன்.

"மகளிர் மன்றம் ஓங்கிவளர வாழ்த்துகிறேன்.

"எங்களிடமிருந்து தேவைப்படும் உதவிகளைத் தாராளமாகக் கேட்டு ஏராளமாகப் பெற உங்களுக்கு உரிமையுண்டு என்பதையும் கூறுகிறேன்."

'தமிழ்நாடு' என்று பெயரிட புதிய போர் முறை!

சி. பா. ஆதித்தன் தலைமையில் தற்கொலைப் படைத் தயார்?

சென்னை, நவ. 6—

சென்னை மாகிலத்திற்குத் தமிழ் நாடு எனப் பெயர் வைக்க வேண்டும் என்று கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த சங்கரலிங்கனாடாரைப் பின்பற்றி ஒரு 'தற்கொலைப் படை' தயாராகியிருப்பதாக சி. பா ஆதித்தன் அறிவித்திருக்கிறார்.

'தமிழ் நாடு' என்று பெயரிடும் வரை 'தற்கொலைப் படை' வீரர்கள், ஒருவர் பின் ஒருவராக உண்ணாவிரதம் இருந்து சாவார்கள் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

இந்த உண்ணாவிரதம் சென்னையில் ஆரம்பமாகும் என்றும், உண்ணாவிரதம் இருக்கப்போகும் தியாகியின் பெயர் பின்னால் அறிவிக்கப்படும் என்றும், அவர் உயிரைப் பலிகொண்ட பிறகாவது, தமிழகத்திற்கு தமிழ் நாடு என்று பெயரிட காமராசருக்குக் காலமும் நேரமும் வருகிறதா என்று பார்க்கலாம் என்றும் தோழர் ஆதித்தன் கூறியிருக்கிறார்.

இந்தச் செய்தி, நவம்பர் 6-ந் தேதிய 'தினத் தந்தி'யில் காணப்படுகிறது.

'யுனெஸ்கோ' மாநாடு

தேசிய சீனுவிற்கே பிரதிநிதித்துவமாம்!

புதுடில்லி, நவ 6—

'யுனெஸ்கோ' பொது மாநாட்டில், செஞ்சீனுவிற்கு இடம் மறுக்கப்பட்டுவிட்டது என்பதுடன், தேசிய சீனுவிற்கு, மாநாட்டில் கலந்துகொள்ள அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

'தேசிய சீனுவிற்கு மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதி கூடாது' என்று இந்தியா, ரஷ்யா போன்றவை வற்புறுத்தியும், பலனற்றுப் போய்விட்டது.

'தேசிய சீனுவிற்கே பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும்' என்ற அமெரிக்கத் தீர்மானத்திற்கு சாதகமாக 31 வாக்குகளும், எதிராக 16 வாக்குகளும் கிடைத்ததால் தீர்மானம் வெற்றிபெற்றிருக்கிறது. 11 பேர் நடுநிலைமை வகித்தனராம்!

நம் நாடு

சென்னை 7—11—'56 புதன்

பேதமை! பேதமை!!

திராவிட முன்னேற்றக் கழகத்தினை, அது தோன்றிய நாளிலேயே அழித்துவிட நினைத்த பலர், ஏமாற்றத்தையும் வெட்கம் மிகுந்த தோல்வியையுமே பலனாகக் கண்டனர். கழகத்தினை முளையிலேயே கருகச் செய்துவிட, அந்தக் கெடு நினைப்புக்காரர்கள் பல இழி வழிகளையும் கையாளத் தவறிய தில்லை. என் செய்வது? கழகம் வளர்ந்தது — வளர்ந்து கொண்டிருக்கிறது; தினமும் வளரும் மக்கள் சக்தியாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

கழகத்தின் பிறப்பையே விரும்பாதவர்கள், கழகம் பெற்றுவரும் வளர்ச்சியையும் அதன் எழிலையும் விரும்பி ஏற்பார்கள் —சகித்துக்கொள்வார்கள் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

கழகம் பிறந்ததையே விரும்பாதவர்களில் காங்கிரசாரும் அவர்களைத் துதி பாடுவதையே தொழிலாகக் கொண்ட பிரபலமான அந்த வட்டார ஏடுகளின் பாதுகாவலர்களும் முன்னணியிலிருப்பவர்களாவர்.

ஆளும் வர்க்கத்திற்கு 'அந்தாதி' பாடுவதையும், மேட்டுக்குடியினரின் நலன்களுக்குப் பாதுகாப்பளிப்பதையும் இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது பகுதியிலும் பிறப்பாலேயே மனிதரிடை உயர்வும் தாழ்வும் உண்டு என்று வாதிடுவதையும் பிழைப்பாகக் கொண்டுள்ளவர்கள்தான் தென்னாட்டில் உள்ள மிகப் பெரும்பாலான பத்திராதிபர்கள்.

இவர்கள், நீண்ட நாட்களுக்கு கழகத்தின் நடவடிக்கைகளை இருட்டடிப்புச் செய்து விடுவதின்மூலமே கழகத்திற்குப் புதைகுழி காண நினைத்து வந்தவர்கள். இன்றுங்கூட, கழகம் நிலைத்துவிட்ட ஓர் இயக்கம்—இலட்சியத்தை ஈடேற்றிக் கொள்ளாமல் அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகில் இனி எவருக்கும் இல்லை—அத்தகு வீரம்கொள் மக்கள் சக்திதான் கழகம்—என்ற நிலை தெளிவான பின்னும்கூட, 'இருட்டடிப்பு பலன் தாராதா?' —என்று ஏங்கிக் கிடப்பவைதான், இன்றுள்ள பெரும்பாலான ஏடுகள்.

இந்த ஏடுகளைப் போலவே, நாடாளும் நாயகர்களாயுள்ள காங்கிரசாரும், நம்மை அலட்சியத்தாலேயே அழித்துவிட நினைத்தவர்கள்; நமது பரிதாபத்திற்கு உரியவர்கள்; ஆனால் மக்களின் மன்னிப்புக்கு உரியவர்கள் அல்லர்! நம்மைப்பற்றிப் பேசுவதே தங்களின் பெருநிலைக்கு இழுக்குத் தேடுவதாகும்—என்று எண்ணி, இறுமாந்திருந்தவர்கள்; இன்று ஏமாற்றத்தால் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பவர்கள்!

முதல் முயற்சியான இருட்டடிப்பு, அலட்சியம் இவற்றில் தோல்வி கண்ட ஏடுகளும், காங்கிரசாரும் கடந்த சில காலமாக இரண்டாவது முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இழித்துரைத்தல், பழித்துப் பேசல், இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டி நம் தலையில் சுமத்துதல் போன்ற இழிசெயல்களில் காங்கிரசாரும், ஏடுகளும் ஈடுபட்டுள்ளனர்.

தேர்தலில் ஈடுபடுவது என்று நாம் திருச்சியில் முடிவு செய்த மறுநாளே, முதன் மந்திரி காமராசர், 'இவர்கள் கோவிலுக்குள் செருப்புப் போட்டுக் கொண்டு செல்லும் பேர் வழிகள்! ஆட்சிக்குவந்தால் கோவில் சொத்தினைக் கொள்ளையடிப்பார்கள்' என்று இழிவான பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்போதே நாம் அவருக்கு, அவரது போக்கு ஆபத்தில் கொண்டுநிறுத்தும் என்பதை எடுத்துரைத்திருந்தோம். ஏடுகளோ! வழக்கம்போல, நம்மைப்பற்றிக் காமராசரது பழி சுமத்தும் இழிவுரையை வெளியிட்டு மகிழ்ந்தனவே தவிர, நமது மறுப்பையும் விளக்கத்தையும் வெளியிட்டு நியாயம் காக்கத் தவறின. அந்த ஏடுகள் ஊருக்கும் உலகுக்கும் நியாய விளக்கம் தருவனவே தவிர, தாங்களும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டன என்பதை உணர்த்தும் உணராதவையாக நடந்துகொள்ளும் மனச்சாட்சியற்றவைதானே!

வரப்போகும் தேர்தலில், 150 இடங்களுக்கு நாம் போட்டியிடுகிறோம் என்ற செய்தி காங்கிரஸ் தலைவர்களே அடிக்கடி கூறிவரும் 'எதிர்க் கட்சி வேண்டும்' என்ற கூற்றுக்கு இணைந்த ஒன்று என்பதால், அவர்கள் அதனை வரவேற்றிருக்கவேண்டும்.

ஆனால் காமராசர், தனது படைவரிசைகளுடன் சென்று, கழகத்தைப் பற்றிப் பொய்யும் புனைசுருட்டும் கூறி, கழகத்தை இழித்துரைக்கும் வேலையைச் செவ்வனே செய்ய முற்பட்டிருக்கிறார். ஏடுகள், அவரது அபத்தங்களைக் கொட்டை எழுத்துக்களில் தலைப்பிட்டுப் பிரசுரித்து மகிழ்கின்றன; கூடத் தாளம் தட்டுகின்றன. இது போதாது என்று, திருச்சியில் காமராசர் படையினர் பேசிய கூட்டத்தில் ஏதோ குழப்பம் நடந்ததாகவும், அதற்கு தி. மு. க.-வினரே காரணம் என்றும் சில ஏடுகள் செய்தி வெளியிட்டிருந்தன. அதனை மறுத்து, கழகத் தலைமை நிலையம் நேற்று முன்தினம் விளக்கம் தந்திருந்தது.

காமராசர்களும், ஏடுகளும் மேற்கொண்டுள்ள—கழகத்தை இழிவுபடுத்துவதின் மூலம் அழிக்க நினைக்கும் போக்கு பலன் தராது என்பதை, நாம் கூறி அவர்கள் தெரிந்துகொள்வதற்கில்லை. இழித்துரைப்பதிலும், பழிசுமத்துவதிலும் ஒருவிடுதலை இயக்கம் அழிக்கப்பட்டுவிட முடியும் என்று அந்தப் புண்ணியவான்கள் கருதினால், அது பேதமை! பேதமை!!

இதனை, தரம் குலைந்த இழிசெயலில் ஈடுபட்டிருக்கும் காமராசர்களும், பெரிய ஏடுகளும் உணர வேண்டும்.

நடிப்பு—இசைப் புலவர்

கே. ஆர். இராமசாமி

சென்னை வருகை

சென்னை, நவ. 6—

கடந்த மூன்று திங்களாக மலேயா, சிங்கப்பூர் பகுதிகளில் அண்ணாவின் கருத்துக் குவியல்களை நாடக அரங்கில் வழங்கி, மக்களின் பாராட்டையும் மதிப்பையும் பெற்ற நடிப்பு இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், அரசாங்கம் அளித்த காலவரம்பு நெருங்கிவிட்டபடியால், இந்த வார இறுதியில் சென்னை விமான நிலையத்தில் வந்து சேருவார் எனத் தெரிகிறது.

மக்கள்மீது அதிக வரி விதிக்கப்படும்?

சுதந்திர இந்தியா சுபிட்சத்திற்கு வழி அதுதானு?

கல்கத்தா, நவ. 5—

இங்கு நடைபெற்ற நிருபர்கள் மாநாட்டில் இந்திய நிதிக் குழுத் தலைவர் கே. சந்தானம், 'இந்தியா முழுமையிலும் மக்கள் அதிகப்படியான வரி விதிப்பை ஏற்பதற்குத் தயாராக இருக்க வேண்டும்' என்று எச்சரித்துள்ளார்

வரி விதிப்பில் எந்த அளவிற்கு மாநிலங்களும், மத்திய அரசாங்கமும் ஒத்த கொள்கையை கடைப்பிடிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யவும் வேண்டுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிக்கு மாநில நிதி நிலைமையும், மத்திய அரசாங்கத்தின் நிதி நிலைமையும் நல்லபடி அமைய வேண்டுமாம்.

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அரசாங்கத்திற்குத் தேவையான பணம் 25—30 சதவிகிதம் வரி விதிப்பு மூலம் கிடைக்கிறதாம்; இந்தியாவில் எட்டு சதவிகிதம்தான் கிடைக்கிறதாம்! எனவே, மேலும் வரி விதிப்பை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியில்லையாம்!

இந்த வரி உயர்வை மக்கள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்குப் பத்திரிகைகள் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கைத்தொழில் பயிற்சி கட்டாயப் பாடமாகும்

சென்னை, நவ. 6—

அடுத்த பள்ளி வருடத்தில் எல்லா இடைநிலைப் பள்ளிகளிலும் ஏற்கனவே பாடத் திட்டங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில அடிப்படைக் கைத்தொழில்கள் கட்டாயப் பாடமாக அமுல் செய்யப்படும் என்று தெரிகிறது.

மரவேலை, நெசவு வேலை, விவசாயம், தோட்ட வேலை ஆண் பள்ளிகளிலும், வீட்டு கைவேலைத் தொழில்கள் பெண்கள் பள்ளிகளிலும் கற்றுத் தரப்படுமாம்.

விளையாட்டுக் கருவிகள் உற்பத்தி பயிற்சி நிலையம்

கிண்டியில் ஏற்படுத்தத் திட்டம்

விளையாட்டுக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காக கிண்டியில் ஒரு பயிற்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இங்கு 40 பேருக்குப் பயிற்சியளிக்கப்படுமாம். அவர்களுக்கு மாதம் ரூ. 30 உபகாரச் சம்பளம் தரப்படும் என்று தெரிகிறது. இதற்காக மத்திய அரசாங்கம் ரூ 85,588 - மானியம் வழங்கியுள்ளதாம்.

வெளிநாடுகளில் கல்வி பயிலுவதற்காக இரண்டாவது திட்ட காலத்தில், ஒவ்வொரு ஆண்டிலும் 12 தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு சர்க்கார் உபகாரச் சம்பளம் அளிக்கப்படும். 1954—55-ல் ஆறு மாணவர்களுக்குத்தான் சர்க்கார் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது.

இனி ருசியாவை எசமானர்களாக ஏற்கமாட்டார்களாம்!

சுதந்திரமாகச் செயல்படப் போகிறார்களாம்!

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் சொல்லை நம்ப வேண்டுமாம்!

புதுடில்லி, நவ 4—

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி, மாஸ்கோவின் தாசானுதாசனாக இருந்து வருகிறது என்ற குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, 'இனி நாங்கள் எவரையும் எசமானர்களாக ஏற்க மாட்டோம்' என்று புதியதோர் கொள்கை வகுத்திருக்கின்றனராம்!

'எந்த ஒரு நாட்டினையும், பிரத்தியேகமான வகையான சோஷலிச நாடு என்று கருத மாட்டோம்; இந்தியத் தேசியப் பாரம்பரியத்திற்கும் உணர்வுகளுக்கும் ஒப்பவே ஒரு கொள்கையை உருவாக்கிக்கொள்வோம்,'

என்று தங்களைப் பிறர் நம்பவேண்டும் என்று எதிர்பார்த்து, இந்தியக் கம்யூனிஸ்டுகள் நடந்துகொள்வதென்று முடிவு செய்திருக்கிறார்களாம்!

'சித்தாந்த விளக்கம் தருவதற்கோ, கொள்கைகளை உருவாக்குவதற்கோ, இதர நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு நாங்கள்தான் தலைவர்களாயிருப்போம் என்று எந்த ஒரு நாட்டு கம்யூனிஸ்டுக் கட்சியும் கோர முடியாது,'

என்றும், இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் கருதுகின்றனராம்!

சோஷலிச நிர்மாணம் அமைதியான வழிகளிலேயே இருக்க வேண்டும் என்றும் அந்தத் தலைவர்கள் கருதுவதாகக் கூறப்படுகிறது மேலும், வர்க்கப்போராட்டம் உள்நாட்டுக் குழப்பத்தையும், இரத்தக் களறியையும் கொண்டதாக இருக்கவேண்டியதில்லை என்று பிரகடனப் படுத்தவும் அந்தத் தலைவர்கள் முடிவு செய்திருக்கின்றனராம்.

மேலும், சோஷலிசத்தில் நம்பிக்கைக் கொண்ட இதர ஜனநாயகக் கட்சிகள் மட்டுமன்றி, சட்ட வரம்புக்கு உட்பட்டு அமைதியாக இயங்குகிற இதர எதிர்க்கட்சிகளும் சோஷலிச இந்தியாவில் இடம் பெறலாம் என்றும் இவர்கள் கருதுகிறார்களாம்.

இது, இவர்களது 'தொழிலாளி வர்க்கத்தின் சர்வாதிகார சாம்ராஜ்ஜியம்' என்ற சோஷலிசத்திலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்று என்று கூறப்படுகிறது.

'தன்மானமும் சுதந்திரமும் பழிக்கப்படுகின்றன'

எகிப்து, ஹங்கேரி நிலை பற்றி நேரு பண்டிதர்

"எகிப்திலும், ஹங்கேரியிலும், தன்மானமும் சுதந்திரமும் பழிக்கப்படுவதை—பங்கப்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம். நவீன கால ஆயுதங்களைக் கொண்டு, அரசியல் இலாபங்களுக்காக மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவதைப் பார்க்கிறோம்"

என்று பண்டித நேரு, டில்லியில் குறிப்பிட்டிருக்கிறார்.

"சில நாடுகளுக்கு, 'பஞ்ச சீல'த்தின் உயரிய தத்துவங்கள் வெறும் வார்த்தைகளாகவே தென்படுகின்றன போலும்!"

என்றும் பண்டித நேரு ஓலமிட்டிருக்கிறார்.

"இந்த நாடுகள், கட்டுக்கு மீறிய (ஆயுத) பலத்தால் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உரிமை கொண்டாடுகின்றன"

என்றும், அவர் இடித்துரைத்திருக்கிறார்.

"தற்போது சில பெரிய நாடுகள், பலத்தையும் பலாத்காரத்தையுமே யதார்த்தமானவை என்று எண்ணுகின்றனபோல் தோன்றுகிறது; அவர்களுக்கு, அழகான சொற்றொடர்கள் எல்லாம் 'இராஜதந்திரக் கருவிகள்'தான் போலும்! இது நமக்கெல்லாம் வருத்தமும் கவலையும் தருவதாகும்"

என்று பண்டிதர், 'யுனெஸ்கோ' மாநாட்டுப் பிரதிநிதிகளை முன்னிறுத்திக் கண்ணீர் வடித்தாராம்!

'ஐ. நா. கலகலத்துப் போகும்'

ரஷ்யப்பிரதமர் எச்சரிக்கை

"எகிப்து மீது ஆங்கிலோ—பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்குத் திட்டமான நடவடிக்கைகளை ஐ. நா. மேற்கொள்ளவேண்டும்"

என்று, ரஷ்யப் பிரதமர் புல்கானின் அமெரிக்கத் தலைவர் ஐசனோவருக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளாராம்.

"இது நடைபெறுவிட்டால், ஐ. நா, மனித சமூகத்தின் முன் தனது கௌரவத்தை இழந்துவிடும்; நிறுவனம் கலகலத்துப் போகும்"

என்றும் புல்கானின் கூறியிருக்கிறாராம்.

'சமாதானம் வேண்டும் என்ற திடமான விருப்பத்தை, ரஷ்யாவும் அமெரிக்காவும் கூட்டாகத் தெரிவித்தால் உடனடியாக ஆக்கிரமிப்பிற்கு ஒரு முடிவு காணலாம் என்றும், மத்தியக் கிழக்கில் தோன்றியுள்ள நெருக்கடி, மூன்றாம் உலக யுத்தத்தில் தான் கொண்டுபோய்விடும் என்றும் அவர் எச்சரித்திருக்கிறாராம்!

அமெரிக்கத் தலைவர் உறுதி மொழி

தனக்கு பண்டித நேரு எழுதியிருந்த கடிதத்திற்குப் பதிலளிக்கையில், அமெரிக்கத் தலைவர் ஐசனோவர், 'எகிப்தில் யுத்தத்தை நிறுத்துவதற்குத் தன்னாலானதை எல்லாம் அமெரிக்கா செய்யும்' என்று உறுதி கூறியிருக்கிறாராம்.

'ஹங்கேரியிலிருந்து வெளியேறுக!'

ரஷ்யாவிற்கு ஐ. நா. உத்தரவு

"ஹங்கேரிமீது ரஷ்யா மேற்கொண்டுள்ள ஆயுதத் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும்" என்று, ஐ. நா. பொதுச் சபை பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

மேலும், ரஷ்யப் படைகள் ஹங்கேரியிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

உணவு உற்பத்தித் திட்டம்

மேலும் விரிவாக்கப்படுகிறது

புதுடில்லி, நவ. 5—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 17·4 சதவிகிதம் அதிக உற்பத்திக்கு ஆவன செய்யப்பட்டது; தற்போது 28 சதவிகிதம் உற்பத்தியை அதிகப்படுத்தத் திட்டம் உருவாகியுள்ளதாம்!

ஒவ்வொரு மாநிலத்தின் உணவு உற்பத்தித் திட்டத்தையும் மேலும் அதிகரிப்பதற்கு மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதாம்.

சின்னசேலம்-செங்கற்பட்டு இடை

புதிய இரயில் பாதை

120 மைல் நீளத்திற்கு அமையுமாம்

புதுடில்லி, நவ. 6—

தென் பகுதி இரயில்வேயில், சின்ன சேலம்—செங்கற்பட்டுக்கு இடையே கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, வந்தவாசி ஆகியவற்றின் வழியாக 120 மைல் நீளத்துக்கு, 'மீட்டர்கேஜ்' இரயில் பாதை யொன்றைப் புதிதாக அமைப்பதற்காக, போக்குவரத்து 'சர்வே' ஒன்றை மேற்கொள்ள இரயில்வே போர்டு அனுமதி வழங்கியிருக்கிறது.

இப்புதிய பாதை அமைக்கப்பட்டால், சென்னை மாநிலத்தில் தென்னாற்காடு, வடஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் உள்ள முக்கிய வர்த்தக, விவசாய இடங்களுக்குப் பெரிதும் உபயோகமாக இருக்குமென்று கூறப்படுகிறது. மற்றும் இப்பகுதிகளிலிருந்து மிளகாய், புகையிலை ஆகிய விளை பொருள்களை அனுப்புவதற்கான வசதிகளும் ஏற்பட்டுவிடும், அபிவிருத்தியடையப்பெறாத பிரதேசங்களுடன் போக்கு-வரத்து நடைபெறுவதற்கு வழியேற்படும்.

கண்ணாடி வளையல்

தொழில் பயிற்சி நிலையம்

ரூ. 37,000 செலவில் ஆரம்பமாகுமாம்

சேலம், நவ. 6—

சேலம் மாவட்டத்தில் ஒரு கண்ணாடி வளையல் தொழிற்சாலை ஆரம்பிக்க சென்னை அரசாங்கம் திட்டம் வகுத்துள்ளதாகத் தெரிகிறது. இந்த நிலையம் கிருஷ்ணகிரி தாலுகா, வெடிமரத்தி கிராமத்தில் துவக்கப்படுமாம். இங்கு ஆண்டுக்கு அறுவருக்கு பயிற்சி அளிக்கப்படும் அவர்களுக்கு மாதம் ரூ. 25 வீதம் மானியம் அளிக்கப்படும். பயிற்சிக்குப் பிறகு கடனாக ரூ 100 வீதம் உதவியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்திற்காக ரூ 37,000 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை சட்டசபை

சென்னை சட்டசபையின் அடுத்த கூட்டம் டிசம்பர் ஆரம்பத்தில் நடைபெறும். பொதுத் தேர்தல் நெருங்கி வருவதால், சபாநாயகர் தேர்தலோ, வேறு அமைச்சர் நியமனமோ இராது என்று காமராசர் அறிவித்துள்ளார்.

கேட்டீரா, சேதி !

சென்னை நகரசபையின் 1955-56-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையை 'குறவஞ்சி' பாணியில் வெளியிட்டுள்ளனர். நகரசபையில் சேவைகளும், திட்டங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இதைப் பலர் படித்து ரசிக்கவும், நாடகமாக நடத்திப் பலர் கண்டுகளிக்கவும் ஏற்பாடு நடைபெற்றுவருகிறதாம்.

செங்கற்பட்டு தாலுகா கிராமங்களுக்கு மின்சாரம்

சென்னை, நவ. 5—

செங்கற்பட்டு தாலுகாவிலுள்ள கோடம்பாக்கம், சாத்தான்குப்பம் கிராமங்களில் மின்சார ஒளி வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 158 நியாய விலை கடைகள்

சேலம் மாவட்டத்தில் 158 - நியாய விலைக் கடைகள் இதுவரையில் திறக்கப்பட்டுள்ளதாக சேலம் கலெக்டர் அறிவித்துள்ளார்.

கதர் திட்டத்திற்கு உதவி

புதுடில்லி, நவ. 6—

கதர் உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காக நடப்பு நிதி ஆண்டில் மொத்தம் ரூ.- 1,43,00,000 நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதாம்.

துணைப் பொதுச்செயலாளர்

என். வி. நடராசன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

தேர்தலில் தி. மு. கழகத்திற்கு ஆதரவு தரவும் தேர்தல் நிதிக்கு உதவுமாறும் வேண்டுகோள்

★

மேட்டுப்பாளையம் :

திருச்சி மாவட்டம்—மேட்டுப்பாளையம் தி. மு. கழகச் சார்பில் 1—11—56 மாலை 6 மணிக்கு, பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏராளமான பொது மக்களும், கைத்தறி செசவாளா தோழர்களும் திரண்டிருந்தனர். தோழர் பி. ஏ. இராசு கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். துவக்கத்தில் தோழர் இராமலிங்கம் துணைப் பொதுச்செயலாளரையும், மற்றத் தோழர்களையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், தோழர்கள் மு. பெ. முத்துக்கருப்பன், குளித்தலை - முத்துகிருஷ்ணன், வெங்கடாசலம், எஸ். வி லிங்கம், துறையூர்-அங்க முத்து ஆகியோர் காங்கிரஸ் ஆட்சியின் அநீதிகளை விவரித்துப் பேசினர்.

இறுதியாக, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் நீண்ட நேரம் சொற்பொழிவாற்றுகையில், தி.மு. கழகம் துவக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை நம் தாயகத்தின் விடுதலைக்கும், மக்களின் வாழ்வுக்கும் ஆன பணிகளில் ஈடுபட்டு வருவதின் விவரங்களையும், அதற்கேற்ப மக்கள் தந்துவரும் ஆதரவினையும், அதுபோலவே தேர்தலில் தி மு கழகம் 150 தொகுதிகளில் போட்டியிடும் மகத்தான பணிக்குப் பொதுமக்கள் பேராதரவு நல்க வேண்டுமென்றும் பொதுச்செயலாளர் விடுத்துள்ள தேர்தல் நிதி வசூலிப்பை கழகத் தோழர்கள் விரைவில் நிறைவேற்றித் தருமாறும் கேட்டுக்கொண்டார்.

துணைப் பொதுச்செயலாளருக்கு மேட்டுப்பாளையம் தி. மு. க. கிளை, சுற்றுப்புற ஊர்களிலுள்ள கிளைகள் ஆகியவைகளின் சார்பில் கைத்தறி ஆடைகள், மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

கழனிவாசலில் கழகத் துவக்கம் :

தஞ்சை மாவட்டம் — கழனிவாசல் தி. மு கழகத் துவக்க விழா 2—11—56 மாலை 6 மணிக்கு, வையாபுரி ஊரணி அருகிலுள்ள திடலில் நடைபெற்றது. தோரணங்களாலும், வளைவுகளாலும் மேடை அலங்கரிக்கப்பட்டிருந்தன. கூட்டத்திற்கு, தோழர் கார்த்திகேயன் தலைமை வகித்தார்.

துவக்கத்தில் பேராஊரணி தோழர் வி. அருணாசலம் கழகக் கொடியை உயர்த்தி வைத்துப் பேசினார்.

அடுத்து, தோழர்கள் பட்டுக்கோட்டை கே. மாணிக்கம், கே. ஏ. வேந்தன், நாகப்பட்டினம் வேலு, கலாநேசன், பி. வடிவேல், பேராஊரணி அடைக்கலம், ஆவனத்தாங்கோட்டை எஸ். இராமசாமி ஆகியோர் கழகக் கொள்கையை விளக்கிப் பேசினர்.

இறுதியாக, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசுகையில், வடநாட்டு ஆட்சியின் சுரண்டல் தன்மையையும், திராவிடம் தனித்தியங்க வேண்டிய அவசியத்தையும், காமராசர் ஆட்சியினர் தமிழகத்திற்குச் செய்துவரும் அநீதிகளையும் விளக்கியதோடு, அடுத்துவரும் தேர்தலில் தி. மு. கழகத்திற்கு இப்பகுதி மக்கள் பேராதரவு தரவேண்டுமென்றும், தேர்தல் நிதிக்கு ஒவ்வொருவரும் தங்களால் முடிந்த அளவுக்கு உதவி செய்து விரைவில் அப்பணியை நிறைவு செய்து தேர்தலுக்கான மற்ற திட்டங்களில் கழகம் தீவிரமாக ஈடுபட அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

கழனிவாசல் தி. மு. கழகம், ஆதிதிராவிடர்கள் சங்கம், கிராம மக்கள் சங்கம், துறையூர் தி. மு கழகம், பேராஊரணி தி. மு கழகம், பட்டுக்கோட்டை தி. மு கழகம் ஆகியவைகளாலும் மற்றும் பல கிளைகளின் சார்பிலும் துணைப் பொதுச்செயலாளருக்கு கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பெருமகளூர்

பேராஊரணியை அடுத்த பெருமகளூரில், 3—11—56ல் திராவிட முன்னேற்றக் கழகக் கிளை துவக்கப்பட்டது. இவ்விழா மாரியம்மன் கோயில் திடலில் அமைக்கப்பட்டிருந்த கே. வி. கே. சாமி அரங்கில், சிறப்புற நடந்தேறியது. துவக்கத்தில் மாலை 5 மணிக்கு முக்கிய வீதிகளின் வழியாய் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டதுடன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களால் கழகக் கொடியும் ஏற்றி வைக்கப்பட்டது.

மாலை 6 மணியளவில் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் ஆர். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பேராஊரணி அடைக்கலம், முத்துப்பேட்டை தருமலிங்கம் ஆகியோர் பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் கழகத்தைத் துவக்கிவைத்து நீண்டநேரம் சொற்பொழிவு ஆற்றினார்.

காங்கிரஸ் ஆட்சியில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அநீதிகளையும், தேர்தல் காலங்களில் காங்கிரஸ்காரர்கள் அளித்த உறுதிமொழிக்கு மாறாக நடந்துவரும் போக்கினையும் நம் திராவிடம்—குறிப்பாகத் தமிழகம் நேரு சர்க்காரால் புறக்கணிக்கப்பட்டு வரும் விபரங்களையும், காமராசர் சர்க்கார் நேரு சர்க்காருக்கு அடிபணிந்து நம் நாட்டின் உரிமைகளைப் பறிகொடுத்து வருவதையும் விரிவாக எடுத்துக் கூறியதோடு, அடுத்துவரும் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு தரவேண்டும் என்றும் துணைப் பொதுச்செயலாளர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

துணைப் பொதுச்செயலாளருக்கு பெருமகளூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் மாரிமுத்து அவர்களால் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டதுடன், மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள கிளைக் கழகங்களின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தோழர் கே. வி. கே. சாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், விருதுநகர் சங்கரலிங்கனார் மறைவுக்கு அனுதாபம் காட்டியும், அவரின் கோரிக்கையை கவனிக்க மறுத்த காமராசர் ஆட்சியின் போக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் திராவிட கழகத் தோழர்கள், காங்கிரஸ் கட்சியினர் உட்பட ஏராளமான பொது மக்கள் திரண்டிருந்தனர். செயலாளர் வீரப்பெருமாள் நன்றி கூறினார்.

தென்பாதி :

பெருமகளூர் — தென்பாதியில், 4—11—56 காலை 8 மணிக்கு, துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களால் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. உள்ளூர் பிரமுகர்களும், கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் கூடியிருந்து இந்நிகழ்ச்சியை இனிது நிறைவேற்றினர். மாவட்டப் பிரதிநிதி பெரியசாமி அனைவரையும் வரவேற்று உபசரித்தார்.

தேர்தல் நிதிக் கூட்டங்கள்

★

அண்ணா

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

★

10-11-56 காலை 9-மணிக்கு—அண்ணாமலை நகரில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

10-11-56 மாலை 6-மணிக்கு தஞ்சையில் பொதுக்கூட்டம்—நகர தி. மு. கழகம்.

11-11-56 காலை—திருச்சியில் சிறப்புக் கூட்டம்—தி. மு. க. மாணவர் கிளை.

குறிப்பு :—இக்கூட்டம் ஒவ்வொன்றிலும் தேர்தல் நிதிக்குப் பெருந் தொகை அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

'நாடக விவசாயிக்குப்' பாராட்டு விழா

கடந்த 80 ஆண்டுகாலமாக நாடக உலக முன்னேற்றத்திற்கும் பாடுபட்ட நாடக ஆசிரியர் பதார்த்தம் பொன்னுசாமி அவர்களுக்கு 4-11-56 அன்று, சென்னை ஒற்றைவாடை கொட்டகையில் நன்றி அறிவிப்பும், பாராட்டும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

நடிகர்கள் எம் ஜி. இராமச்சந்திரன், எஸ் எஸ். இராசேந்திரன், எம். ஆர். இராதா மற்றும் பல கலைஞர்கள் விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினர்.

காரைக்குடி அழகப்பா கல்லூரி தி. மு. க.—மாணவர் கிளை

தி. மு. க - மாணவர் கிளை அமைப்பதற்கு, மேற்படி கல்லூரி மாணவர்கள் சார்பில், கல்லூரிப் பூங்காவில் கூட்டமொன்று நடைபெற்றது. அதுபோது, தி. மு க. மாணவர் கிளையின் செயலாளராக இரா. செயபாலன்; துணைச் செயலாளராக கந்தசாமி; பொருளாளராக செயராமன் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் அறுவர் கொண்ட செயற்குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. விரைவில், மாணவர் கிளைத் துவக்க விழாவை நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கீரனூர் தி. மா. மு. கழகம்

30—10—56 மாலை 5 மணியளவில் தி. மா. மு. க. செயற்குழுக் கூட்டம் தமிழ் இல்லத்தில், தோழர் ஆ. தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றபோது கழகம் எம்முறையில் செயல்படுவதென ஆலோசிக்கப்பட்ட பின், உயிர்த்தியாகி சங்கரலிங்கனாரின் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொண்டும், சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடும்படி அரசினரை வலியுறுத்தியும், துவக்க விழாவில் 'அண்ணா' உருவப் படத்தைத் திறந்து வைப்பதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பெயர் சூட்டல்

சென்னை—கோடம்பாக்கம் 35-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் தோழர் ஜி. தியாகராசன் அவர்களின் துணைவியார் பாய் அம்மாள் 15-10-56 இரவு 10-15 மணிக்கு ஓர் ஆண்மகவுக்குத் தாயானார்; குழந்தைக்கு 'மனோகரன்' என்று பெயரிடப்பட்டது இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி —பொறுப்பாளர்.

*******************************-****

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், **150** தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே விறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது !
பொறுப்பு மிகுகிறது !
கடமையை விரைந்து செய்ய வாரீர் !—வாரீர் !!

வணக்கம்

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு :—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி :—

பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

****

டி. கே. சீனிவாசன்

8-11-56 காலை 7-30 மணிக்கு சென்னை — சென்ட்ரல் இரயில்வே நிலையத்திலிருந்து புறப்படும் 'பம்பாய் எக்ஸ்பிரசி'ல், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், ஆமதாபாத், பம்பாய் தி. மு. கழகக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகப் புறப்படுகிறார்.

கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத் திறப்புவிழா

9—11—56 மாலை 5-மணிக்கு, பெரியகுளத்தில் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பகத்தைத் தோழர் என். சீவரத்தினம் திறந்து வைப்பார். அன்று நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி சம்பத் சொற்பொழிவாற்றுவார்.

அறிவித்தபடி ஆர்ப்பாட்டம் நடைபெறவில்லை

பாதுகாப்புப் போலீசார் அடைந்த ஏமாற்றம்!

சென்னை, நவ. 7—

நவம்பர் 6-ந் தேதியன்று சென்னை நகரசபை உறுப்பினர் சி. கே. நாராயணன் தலைமையில் சோஷலிஸ்டுக் கட்சித் தோழர்கள், அரண்மனைக்காரத் தெருவில் உள்ள பிரிட்டிஷ் தூதவாலயலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்வர் என்று 'தினத்தந்தி'யில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நேற்று இரவு எட்டு மணிவரை, அறிவிக்கப்பட்டிருந்தபடி சோஷலிஸ்டுத் தொண்டர் எவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவில்லை.

இந்த அறிவிப்பை ஒட்டி, தூதவாலயலகத்தின் முன் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நெடுநேரம் காத்திருந்த போலீசார், ஆர்ப்பாட்டக்காரர் எவரும் வராததால் பலத்த ஏமாற்றத்திற்கு ஆளாகினர்.

நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 17 சோஷலிஸ்டுத் தோழர்களை போலீசார் கைது செய்தனர் என்று தெரியவருகிறது.

தேர்தல் நிதி தாரீர்!

வரவு :	ரூ. அ. பை
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், சென்னை அண்ணா அவர்கள் மூலம்	1000—0—0
சென்னை—தேனாம்பேட்டை தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகக் கூட்டம்—அண்ணா அவர்கள் மூலம்	50—0—0
கோவை தி. மு. கழகக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம்	30—0—0
திருவண்ணாமலை சுற்றுப்புற ஊர்களில் நடைபெற்ற கூட்டங்களில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மூலம்	12—5—9
பண்ணைக்காடு தி. மு. கழகக் கூட்டம்—துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் மூலம்	50—0—0
சேலம் நகர 23-வது வட்ட தி. மு. கழகக் கிளை	51—0—0
மதுரை சுந்தரம் அவர்கள்	51—0—0
பழனி திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்	8—4—0
சிதம்பரம் தி. மு. க. மாணவர் கிளை கூட்டத்தில் வசூல்	5-12—0
மதுரை மறுமலர்ச்சி மன்றம்	5—0—0
பொள்ளாச்சி தி. மு. கழகம்	4—8—0
குடந்தை கே. கே. நீலமேகம் மூலம்	3—7—0
சங்கராபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்	2—0—0
ஆயிபுரம் கே. ஆர். இராமகிருஷ்ணா	2—0—0
இராமநாதபுரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்	1—5—6
ஆக மொத்தம்	ரூ. 1,276—10—3

எகிப்தில் போர் நிறுத்தம்!

பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஆதிக்கவாதிகள் பணிந்தனர்!

ஐ. நா. பொதுச்செயலாளர் முயற்சி வெற்றி?

லண்டன், நவ. 6—

நேற்று இரவுடன் எகிப்தில் நடத்திக்கொண்டிருக்கும் தாக்குதல்களை, சில நிபந்தனைகளின்பேரில் நிறுத்திவைக்க பிரிட்டனும், பிரான்சும் சம்மதித்திருப்பதாக ஐ. நா. பொதுச் சபைச் செயலாளர் ஹாமர்க்ஸ்ஜோயெல்டு தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேலும், எகிப்தும் நிபந்தனையின்றி சண்டையை நிறுத்த வேண்டும் என்றும், அதனை ஐ. நா. பொதுச்செயலாளர் உறுதிசெய்ய வேண்டும் என்றும், அந்த நம்பிக்கையிலேயே போர் நிறுத்தத்திற்குத் தாங்கள் சம்மதிப்பதாகவும் பிரிட்டிஷ்—பிரெஞ்சு சர்க்கார்கள் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

'நிறுவப்படவிருக்கும் சர்வதேசப்படை, ஐ நா. பொதுச் சபையின் நவம்பர் 2-ந்தேதிய தீர்மானத்தினை அமுல் செய்வதற்குத் தயங்கக்கூடாது' என்றும் அந்த சர்க்கார்கள் ஐ. நா. பொதுச்செயலாளருக்கு எழுதியுள்ள கடிதங்களில் தெரிவித்திருக்கின்றனவாம்.

ஐ. நா. பொதுச்செயலாளரின் பெருமுயற்சியால், பிரிட்டிஷ்—பிரெஞ்சு ஆதிக்கவாதிகள் சற்று இறங்கி வந்திருக்கின்றனர் என்றே ஐ. நா. பார்வையாளர் கூறுகின்றனர்.

மேலும், இஸ்ரேலும் எகிப்தும் நிபந்தனை ஏதும் இன்றி போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டிருப்பதாகவும் ஐ. நா. செயலாளர் அறிவித்திருக்கிறார்.

மக்கள் சபைக்கு தகவல்

பிரிட்டிஷ் மக்கள் சபைக்கு இந்தத் தகவல், பிரதமர் ஈடனால் தரப்பட்டபோது, சபையில் பெரும் ஆரவாரம் எழுந்தது.

'ஐ நா. நிறுவும் படை, நாம் விரும்புகிற இலட்சியத்தை ஈடேற்றித் தரும்' என்றும் ஈடன் கூறினாராம்.

'சூயஸ் கால்வாய், பாதுகாக்கப்படவேண்டியது, உலகக் கப்பல் போக்குவரத்து வர்த்தகம் இவற்றைப் பொறுத்து மிக அத்தியாவசியமானதாகும். எனவே, இஸ்ரேலும் - எகிப்தும் அந்தப் பிரதேசத்திற்குள் நுழையாமல் பாதுகாக்க வேண்டும்' என்றும் ஈடன் கூறினாராம்.

புல்கானினுக்குப் பதில்

'உடனே போரை நிறுத்தாவிட்டால் ரஷ்யா போரில் ஈடுபடும்' என்று ரஷ்யப் பிரதமர் புல்கானின் அனுப்பியிருந்த எச்சரிக்கைக் கடிதத்திற்குப் பதிலளிக்கையில் பிரிட்டிஷ் பிரதமர் ஈடன், 'மிக வருந்துகிறோம்; நாங்கள், பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு காண விழைகிறோம்; உங்களோடு விவாதம் நடத்திக்கொண்டிருக்க விரும்பவில்லை. எகிப்தில் பிரிட்டனும், பிரான்சும் நடத்திய போரினால் ஏற்பட்ட நஷ்டத்தைவிட, ரஷ்யா ஹங்கேரியில் விளைவித்துள்ள கொடுமை, நஷ்டம் மகத்தானது—ஒப்பிட்டுப் பார்க்க முடியாதது. அப்படியிருக்க, பிரிட்டிஷ் நடவடிக்கைகள் காட்டுமிராண்டித் தனமானவை என்று வர்ணிக்க, ரஷ்யாவிற்கு வாயேது?' என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

ரஷ்யாவின் எச்சரிக்கை!

இதர ஐ நா. உறுப்பினர்களுடன் சேர்ந்து, மத்தியக் கிழக்கில் ஆக்கிரமிப்பை முறியடித்து அமைதியை நிலைநாட்ட ரஷ்யா உறுதி பூண்டிருக்கிறது என்று பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளுக்கு ரஷ்யா எச்சரிக்கை விடுத்தது.

மேலும், இஸ்ரேலுக்கும் இது போன்றதொரு எச்சரிக்கைக் கடிதம் தரப்பட்டிருக்கிறது.

ரஷ்ய யோசனை நிராகரிப்பு

'அமெரிக்க - ரஷ்யத் துருப்புகள் கூட்டாகச் சேர்ந்து, எகிப்துக்குள் நுழைந்து அமைதியை நிலைநாட்டவேண்டும்' என்று, ரஷ்யா, ஐ நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவந்த தீர்மானத்தை சபை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவே மறுத்துவிட்டிருக்கிறது.

'எண்ணிப்பார்க்கவே முடியாதது'

'இந்தத் தீர்மானம், எண்ணிப் பார்க்கவே முடியாத ஒன்றாகும்,' என்று அமெரிக்கப் பிரதிநிதி கூறியிருக்கிறார்.

இரு துறைமுகங்கள்

போர்ட் செய்ட், போர்ட் பாத் என்ற இரு துறைமுகங்களும், பிரிட்டிஷ்—பிரெஞ்சுத் துருப்புகள் வசம் சிக்கிவிட்டதாகவும், எகிப்தியர் மூழ்கடித்த கப்பல்கள் எல்லாம் சூயஸ் கால்வாயிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டு, கால்வாய், போக்குவரத்திற்குத் தயாராகி விட்டதாகவும், பிரெஞ்சு—பிரிட்டிஷ் இராணுவ வட்டாரங்கள் தகவல் தந்திருக்கின்றன.

சூயஸ் பகுதியிலிருந்தும், எகிப்தின் இதர எல்லைப் பகுதிகளுக்குள்ளிருந்தும், பிரிட்டிஷ்—பிரெஞ்சு—இஸ்ரேல் துருப்புகள் வெளியேறுவது பற்றித் தகவல் ஏதும் தரப்படக்காணோம்.

வல்லரசுகள் மாநாடு கூட்ட யோசனை?

பெர்ன், நவ. 6—

மூன்றாவது உலகப்போர் என்ற கருமேகங்கள் உலகத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன என்றும், அமைதியை நிலைநாட்ட அமெரிக்கா, பிரெஞ்சு, ரஷ்யா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் பிரதமர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டி விவாதிக்க முன்வர வேண்டும் என்றும் சுவிட்சர்லாந்து யோசனை கூறியுள்ளது.

மத்தியதரைக் கடலுக்கு அமெரிக்க நாசகாரிகள்?

நியூபோர்ட், நவ. 6—

'12 அமெரிக்க நாசகாரி' கப்பல்கள் இன்று மத்தியதரைக் கடலுக்குப் புறப்படுகின்றன; இது 'மாமூலான ஏற்பாடு' என்று அமெரிக்கக் கடற்படை இலாகா கூறியுள்ளதாம்.

கொழும்பு அரசுகளின் மாநாடு

புதுடில்லி, நவ. 5—

கொழும்பு மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் பிரதமர்கள் இங்கு நவ. 12-ந் தேதியன்று கூடுவார்கள். மேற்கு ஆசிய நெருக்கடிகள் குறித்து அப்போது விவாதிக்கப்படுமாம்.

காஞ்சி-பிள்ளையார்பாளையம் வேலாயுதம் படிப்பகம் ஆண்டு நிறைவு விழா

8—11—56 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பக ஆண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம், காஞ்சீபுரம்—பிள்ளையார் பாளையம், திருவேகம்பன் தெரு தோப்பில், டி. கந்தசாமி எம்.சி., அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி-கல்யாணசுந்தரம், சி.வி.எம். அண்ணாமலை எம்.சி., ஆகியோர் பேசுவர்.

அண்ணா தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம்

9—11—56 காலை 9 மணியளவில், கடலூர்—தேவனாம்பட்டினம் மெயின்ரோடு, எண் 2 இல்லத்தில், தோழர் பா. சத்தியமூர்த்தி—தோழியர் சகுந்தலா வாழ்க்கை ஒப்பந்தம், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும்; இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

இரா. நெடுஞ்செழியன் தலைமையில் திருமணம்

9—11—56 காலை 7 மணியளவில், காஞ்சீபுரம் கிழண்டை இராச வீதி, யாதவ சத்திரத்தில், தோழர் கோவர்த்தனன் அவர்கள் தோழியர் கிருஷ்ணவேணியைத் துணைநலமேற்கும் விழா, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

கே. வி. கே. சாமி கொலை வழக்கு

11 எதிரிகள்மீது குற்றப் பத்திரிகை தாக்கல்

தூத்துக்குடி, நவ. 6—

தோழர் கே. வி. கே. சாமி படுகொலை செய்யப்பட்டதை ஒட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கில், தூத்துக்குடி சப்-மாஜிஸ்திரேட் முன்னிலையில் போலீசார் இறுதி குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

(1) சந்தியாகு, (2) பொன்னுசாமித்தேவர், (3) ஆதிநாடார்; (4) பெருமாள், (5) பெருமாள்நாடார்; (6) தங்கப்பழம், (7) வெங்கடாசலம், (8) சித்திரவேல்தேவர், (9) பாண்டியன்தேவர், (10) ஜெகன்னாதன், (11) பொன்னையா ஆகியோர் கூடிச் சதி செய்து, பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டு, தோழர் கே. வி கே. சாமி கடந்த செப்டம்பர் 20-ந் தேதியன்று இரவு காசுக்கடைத்தெரு வழியாக வந்தபோது தாக்கிக் கொன்றனர் என்று குற்றப் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறதாகத் தெரிய வருகிறது.

எல்லா எதிரிகள்மீதும் இ.பி.கோ. 120 (பி) பிரிவின்படியும் 1 முதல் 5, 7 முதல் 10 வரையுள்ள எதிரிகள் 9 பேர்மீது இ. பி. கோ. 148, 302 பிரிவுகளின்படியும், 6-வது எதிரிமீது இ. பி. கோ. 147, 302 பிரிவுகளின்படியும் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

சுமார் 60 சாட்சிகள் விசாரிக்கப்படுவார்கள் என்றும், நவம்பர் 10-ந்தேதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்ணாமலைநகரில் தி. மு. க. தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம்

10-11-56 காலை 9-மணிக்கு, சிதம்பரம் ராசா டாக்கீசில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம.எல்.ஏ., அவர்கள் தலைமையில் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென சிறப்புக் கூட்டம் நடைபெறும். அண்ணா, துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் தில்லை-வில்லாளன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை கலைக்கல்லூரியில் வள்ளுவர் விழா

பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் சிறப்புரை

சென்னை, நவ. 7—

சென்னை அரசினர் கலைக் கல்லூரி — சிதக்காதி, செந்தமிழ்ச் சங்கத்தின் சார்பில், நேற்று மாலை 4-45 மணி அளவில், கல்லூரி மண்டபத்தில் வள்ளுவர் விழா சிறப்புற நடைபெற்றது.

கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் திரு. க. பெருமாள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார்.

தலைவருக்கும் சிறப்புச் சொற்பொழிவாளரான தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

திருமதி சௌந்தரம் - கைலாசம், கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் நீண்ட கைதட்டல்களுக்கிடையே பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், வள்ளுவரையும் குறளையும் பற்றிப் பல மேற்கோள்களுடன் சுமார் ஒரு மணி நேரம் சிறப்புரை நிகழ்த்தினர்.

சங்கச் செயலாளர் நன்றியறிதலுடன் 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே' என்ற இசையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

வழக்கத்தைவிட அதிகமாக மண்டபம் முழுவதும் மாணவர்கள் திரண்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கழகக் கூட்டம்

☆

மேலச்சேரி :

குளக்கரை மைதானத்தில்

9—11—56 மாலை 6 மணிக்கு

தலைவர் :

வி. கோபால் கவுண்டர் எம்,எல்.ஏ.

பேசுவோர் :

அண்ணா

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.,

ப. உ. சண்முகம்

கே. பாண்டுரங்கன்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.